# ஆண்டாள் திருப்பாவையில் உவமைநயம்

*ப. சந்தியா*
இரண்டாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783774

***ஆய்வு சுருக்கம்***

*ஒரு பொருளை அதைவிடச் சிறந்த மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை ஆகும். மேலும் உவமைத் தொடரில் உவமை முன்னும் உவமேயம் பின்னுமாக அமைந்து வரும். இத்தகைய சிறப்பு கொண்ட உவமையை அடிப்படையாக கொண்டு வினை, பயன், மெய், உரு, என்னும் வகைப்பாட்டின் அடிப்படையில் ஆண்டாள் அருளிய திப்பாவையில் உவமைகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*

***கலைச்சொற்கள்:*** *உவமை, திருப்பாவை, வினை, பயன், மெய், உரு.*

## முன்னுரை

*மிகத்தொன்மையான தமிழ்மொழி விரிந்த இலக்கணப் பரப்பைக் கொண்டது. இலக்கணம் என்பது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் பாகுபாடுகளைக் கொண்டது. அணி என்பதற்கு அழகு என்று பொருள். கவிஞர்கள் உவமைகள் மூலம் பொருட்களைத் தெளிவாக பிறர் உள்ளத்தில் பதிய வைக்கின்றன. இதே போல் ஆழ்வார்கள் பாசுரங்களின் ஒன்றான ஆண்டாள் திருப்பாவையில் உவமை குறித்து ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

## உவமையின் வகைகள்

***வினை பயன் மெய் உரு என்ற என்ற நான்கே***
***வகைப்பெற வந்த உவமைத் தோற்றம்***[1]

*என்ற தொல்காப்பிய நூற்பாவில் வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் தான் உவமை அமையும் என்கிறார் தொல்காப்பியர்.*

## வினை

*ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை வினை உவமை எனப்படும். இவை, நீட்டல், முடக்கல், விரித்தல், குவித்தல் போன்றவையை உள்ளடக்கும்.*

*கண்ணன் கையில் உள்ள சக்கரம் மின்னல் போல் மின்னுகிறது என்று சக்கரத்திற்கு மின்னலை உவமையாக கூறப்பட்டுள்ளது.*

***“பற்பநாபன் கையில்***
***ஆழிபோல் மின்னி”***

***- (திரு.பா.பா.எ.4)***

*என்று இவ்வரி பறைசாற்றுகிறது. இவை ஒளித்தல் என்னும் செயலைக் குறித்து வந்ததால் இது வினை உவமையாயிற்று.*

***மின்னனையே நுண்ணிடையார்***[2]

*என்ற இவ்வரிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும் இதில் மின்னுதல் என்ற ஒரு செயலைக் குறித்து வந்ததால் இது வினை உவமையாயிற்று.*

*வில்லில் இருந்து தொடுக்கப்படும் அம்புகள் போன்று மழை பொழிவாயாக என்று வில்லுக்கு மழையை உவமையாக கூறப்பட்டுள்ளதை,*

***“சார்ங்கம் உதைத்த சரமழைபோல்”***

***- (திரு.பா.பா.எ.4)***

*என்று இவ்வரிகள் பறைசாற்றுகிறது. மேலும் இவை பொழிதல் என்னும் செயலைக் குறித்து வந்ததால் இது வினை உவமையாயிற்று.*

சூரியனும் சந்திரனும் எழுவது போன்று கண்ணனின் அழகிய கண்கள் விழிப்பது உள்ளது என உரைக்கும்

**"திங்கள் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்ங் கொண்டு"**

**- (திரு.பா.பா.எ.22)**

என்ற இப்பாடல் வரிகளை ஆராயும் போது நிலவும் சூரியனும் உதிக்கும் செயலை கண்ணனின் கண் விழிக்கும் செயலுக்கு உவமையாக காட்டியிருப்பதால் இது வினை உவமையாயிற்று. இவ்வரியில் 'போல' என்ற உவம உருபு பயின்று வந்து விரிவுவமையாகிறது.

**'தீயினால் காசாகும் செப்பேல்'**

**- (திரு.பா.பா.எ.4)**

எஞ்சி நிற்கும் குறைகள் அனைத்தும் தீயில் எறிந்திட அது எப்படி தூசு போல் சாம்பலாகும் என்று குறைகளை தீக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது. மேலும் இவை சாம்பலாகும் என்னும் வினையை கொண்டு முடிந்ததால் இவை வினை உவமம் ஆயிற்று. மேலும் இவ்வரியில் உவம உருபு எதுவும் கையாளப்படவில்லை எனவே இது தொகை உவமையாகிறது.

அழகான இளங்கிளி போன்று பேசும் பெண்களே என்று கிளியின் பேச்சை பெண்கள் பேச்சுக்கு உவமையாக பயன்படுத்தப்பட்டுள்ளதை,

**'எல்லே! இளங்கிளியே'**

**- (திரு.பா.பா.எ.15)**

என்ற திருப்பாவை வரியின் மூலம் தெரிய வருகிறது. இவ்வரியில் உள்ள உவமையின் தன்மையை ஆராயும் போது வினை சார்ந்த தொகை உவமை பயின்று வந்துள்ளதை அறிய முடிகிறது.

**பயன்**

பயன் என்பது ஒரு செயலாலோ அல்லது தொழிலாலோ அதன்மூலம் பயன்பெறுவது ஆகும். பயன் நன்மை தீமையாகிய என இரு விளைவுகளை தருவது ஆகும்.

**'சீர்த்த முலை பற்றி
வாங்கக், குடம் நிறைந்த வள்ளல் பெரும்பசுக்கள்'**

**-(திரு.பா.பா.எ.3)**

தொழுவத்தில் உடல் செழிப்பாக உள்ள மாடுகள் வள்ளலைப் போன்று அளிக்கும் சிறந்த பெரிய பசுக்கள் அழகிய முலைக் காம்புகளை பிடித்து கறந்திட குடம் நிறைய பால் அளிக்கும் என்று மாடுகள் அதிக பால் கறப்பதற்கு வள்ளலை உவமையாக காட்டியுள்ளதை அறிய முடிகிறது. இவ்வுவமையைக் கூறும் பாடலடிகளில் உவம உருபு பயன்படுத்தப்படவில்லை.

**வடிவம் (உரு)**

ஒரு பொருளின் தோற்றத்தை வடிவம் எனவும் கூறுவர். இது வடிவம் அல்லது மெய் உவமை எனப்படும். இவை வட்டம், சதுரம், கோணம் போன்றவை அடிப்படையாக கொண்டு அமையும்.

**'கதிர் மதியம் போல் முகத்தான்'**

**- (திரு.பா.பா.எ.1)**

ஒளிநிலா போன்ற முகம் உடைய அழகன் கண்ணன் என கண்ணனை அறிமுகம் செய்யும் இப்பாடல் வரியை ஆராயும் போது ஒளிநிலா போன்ற முகம் என நிலவின் வடிவத்தை கண்ணனின் முகத்திற்கு உவமையாக கூறியதால் இது வடிவ உவமையாக எடுத்துக் கொள்ளலாம். இதில் போல் என்ற உவம உருபு கையாளப்பட்டுள்ளது. மேலும் முல்லை நிலத்தல் வாழும் பெண்களின் மறைவிடம் புற்றின் மீது ஆடும் பாம்பின் படம் போன்று உள்ளது என்று விளக்கும்.

**'குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றரவு அல்குல் புன மயிலே'**

**- (திரு.பா.பா.எ.11)**

இப்பாடல் வரிகளை ஆராயும்போது பாம்பின் படம் போன்ற அல்குல் என்று பெண்ணின் மறைவிடத்திற்கு வடிவம் சார்ந்த உவமை தொகை உவமையாக பயின்று வருவதை அறிய முடிகிறது. மேலும் 'புன மயிலே' என்ற

*இவ்வரியில் மென்மையான மயில் போல தோளை கொண்டவள் என்று மேலும் ஒரு வடிவம் சார்ந்த உவமை காணப்படுகிறது*

***'போதரிக் கண்ணினாய்'***

***- (திரு.பா.பா.எ.13)***

*அழகிய மலர்மொட்டுப் போன்ற கண்ணழகி என்று பெண்களின் கண்ணை மலர்மொட்டுக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது. எனவே இதில் வடிவ உவமை வந்துள்ளது எனலாம். இவ்வரியில் உவம உருபு கையாளப்படவில்லை.*

***'செப்பன்ன மென் முலை'***

***- (திரு.பா.பா.எ.20)***

*கலசம் போன்ற பொன்னிறமான மென்மை மிக்க முலைகளும் என்று நப்பின்னையின் முலைக்கு உவமையாக கலசத்தின் வடிவத்தை கூறப்பட்டுள்ளதால் இது வடிவ உவமையாக எடுத்துக் கொள்ளலாம். மேலும், இதில் உவம உருபு எதுவும் கையாளப்படாமல் தொகை உவமையாக காணப்படுகிறது.*

***முகழ் முலை[3]***

*என்று நெடுநல்வாடையிலும் இதே உவமை பார்க்க முடிகிறது.*

**நிறம் (உரு)**

*நிறத்தை அடிப்படையாகக் கொண்டு பிறப்பது நிற உவமையாகும். இது வெண்மை, பொன்மை, பசுமை, கருமை போன்றவையில் அடங்கும்.*

***'உருவம் போல் மெய் கறுத்துப்'***

***- (திரு.பா.பா.எ.4)***

*என்ற வரியை ஆராயும்போது கண்ணனின் கருமேனியைப் போன்று மேகத்தின் உடல் கருத்துகண்ணனின்உடம்பைபோன்றுகருமை நிறம் கொண்டது. மேகத்தின் உடல் என்று மேகத்துக்கு உவமையாக கண்ணனின் நிறம் கூறப்பட்டுள்ளதால் இது நிற உவமை ஆயிற்று. மேலும், இவ்வரியில் போல் என உவம உருபு வந்து விரிவுவமையாயிற்று.*

***'முகில் வண்ணன்' - (திரு.பா.பா.எ.11)***

*கருமேகம் போன்ற நிறமுடைய அழகன் கண்ணன் மேகம் போன்ற கருமை நிறம் கொண்டவன் என்று கண்ணனுக்கு உவமையாக மேகத்தின் நிறம் கூறப்பட்டுள்ளதால் இது நிற உவமையாக எடுத்துக்கொள்ளலாம். மேலும், இவ்வரியில் உவம உருபு ஏதும் கையாளப்படவில்லை.*

***'செந்தாமரைக் கையால் சீரார்'***

***- (திரு.பா.பா.எ.18)***

*செந்தாமரை மலர் போன்ற அழகிய சிவந்த நிறம் கொண்டவள் என்று தோழிக்கு உவமையாக தாமரையின் நிறம் கூறப்பட்டுள்ளது. இது நிற (உரு) உவமையாக எடுத்துக் கொள்ளலாம். மேலும் இவ்வரியில் உவம உருபு எதுவும் கையாளப்படவில்லை.*

***'குத்து விளக்கு எரியக்'***

***- (திரு.பா.பா.எ.19)***

*பகல் போல ஒளிவீசும் குத்துவிளக்குகள் எரிகின்றன என்று குத்துவிளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு நிறத்திற்கு உவமைாகி பகல் வெளிச்சத்தை நிறமாக கூறப்பட்டுள்ளதால் இது நிற உவமையாயிற்று. மேலும், இவ்வரியில் உவமஉருபு கையாளப்படவில்லை.*

***'போல்வன சங்கங்கள்'***

***- (திரு.பா.பா.எ.26)***

*பால் போன்ற வெண்மையான நிறமுடைய சங்கு என்று சங்கிற்கு உவமையாக பாலின் வெண்மையான நிறம் கொண்டு கூறப்பட்டுள்ளதால் இது நிற உவமை ஆயிற்று. மேலும் இவ்வரியில் உவம உருபு 'போல்' வந்துள்ளது.*

***'பொற்றாமரை அடியே'***

***- (திரு.பா.பா.எ.29)***

*பொன்தாமரை போன்ற திருவடி என்று சிவந்த நிறம் கொண்ட கண்ணனின் பாதத்தை உவமையாககூறப்பட்டுள்ளதாலும் இப்பாடல் வரியில் கண்ணனின் பாதநிறத்தை தாமரைக்கு உவமையாக எடுத்துக் கொள்ளலாம். மேலும் இவ்வரியில் உவமஉருபு எதுவும் கையாளப்படவில்லை.*

## முடிவுரை

பெருமையாகப் பேசப்படும் அணிகளில் உவமை அணி என்பது போற்றற்குரியதாகும். ஆழ்வார்கள் பாசுரங்களின் ஒன்றான ஆண்டாள் திருப்பாவை பகுதியில் காணப் படுகிறது. மேலும் இவை ஆழ்வார்கள் பாசுரங்களின் ஒன்றான ஆண்டாள் பகுதியில் பெண்களின் குறியீடுகளாக காட்சிப் படுத்துதல்களாக அமைந்துள்ளன. இவ்வாறு ஆழ்வார்கள் பாசுரங்களின் ஒன்றான ஆண்டாள் திருப்பாவை பகுதியில் உவமை நலன்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதை இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளோம்.

## சான்றெண் விளக்கம்

1. திருஞானசம்பந்தர். ச, தொல்காப்பியம் பொருளதிகாரம், நூ. 272.
2. சீனிவாசன். ம. பெ, பெரியாழ்வார் திருமொழி, 133 பெரியாழ்வார் திருமொழி. 226.
3. டாக்டர் சாமிநாதையர். உ. வே, பத்துப் பாட்டு நெடுநல்வாடை, பா. எ.149.

## துணைநூற்பட்டியல்


1. சீனிவாசன். ம.பெ. - பெரியாழ்வார் திருமொழி ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ, 8 (இடண்டாம் மாடி) மேயர் சம்பந்தம் தெரு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.
2. டாக்டர் சாமிநாதையர். உ.வே - பத்துப்பாட்டு நெடுநல்வாடை டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல் நிலையம், 2, அருண்டேல் கடற்கரை சாலை, பெசன்ட் நகர், சென்னை - 600090.
3. திருஞானசம்பந்தர். ச - தொல்காப்பியம் பொருளதிகாரம் கதிர் பதிப்பகம், 93, தெற்கு வீதி திருவையாறு - 613 204. முதற்பதிப்பு - மார்ச் - 2020.
4. பார்த்தசாரதி. ஆர் - திருப்பாவை திருவெம்பாவை பாவை பப்ளிகேஷன்ஸ் 142, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600014.